<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**OS 06/2009**

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ம் நாள் Dw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 25.11.2025

Dw1 (ரவிசந்திரன்)

**குறுக்கு விசாரணை (3 ம் பிரதிவாதி தரப்பில்)**

இந்த வழக்கில் 1.06.2004 ம் தேதி விசாரணைக்கு ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. 21 ஆண்டுகள் கழித்து நான் வழக்கில் மனு தாக்கல் செய்து ஆஜராவதற்கு என்ன காரணம் என்றால் சீரங்கசாமி மற்றும் சுப்பிரமணி பார்த்துக கொள்வதாக சொன்னார்கள், அதனால் விட்டு விட்டேன். தற்போது அவர்கள் பார்த்துக் கொள்ளாததால் நான் மனு செய்தேன். வழக்கு நிலுவையில் உள்ள விவரத்தை எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் 4 மாதத்திற்கு முன்பு சீரங்கசாமியை பார்த்தபோது தெரிந்து கொண்டேன். இவ்வழக்கில் வாதிகள் என்னை சாட்சியாக விசாரிக்க இடை மனு எண் 12/2024 தாக்கல் செய்தார்கள் என்றும் அந்த மனு 12.11.2024 ல் தள்ளுபடி செய்யப்பட்ட து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதை எதிரித்து வாதிகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு 312/2025 தாக்கல் செய்தார்கள் என்றும், அந்த மனு வழக்கை கால தாமதப்படுத்த தாக்கல் செய்த மனு என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் நான் எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எதிர்வாதத்திற்கான விவரங்கள் யார் சொன்னார்கள் என்றால் நான் தான் சொன்னேன். வாதிகள் எனக்கு உறவினர்களா என்றால் இல்லை, என் சமூகத்தை சேர்ந்தவர்கள். அதனால் தான் எனக்கு பொது அதிகார ஆவணம் கொடுத்தார்களா என்றால் நான் கடன் கொடுத்ததால் எனக்கு பொது

அதிகார ஆவணம் கொடுத்தனர். பொது அதிகார ஆவண்ததின் அடிப்படையில் நான் எத்தனை ஆவணங்கள் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் ஒரு உறுதிமொழி ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன். ஒரு கிரய பத்திரம் ஒன்றை சீரங்கசாமி மற்றும் சுப்பிரமணியத்திற்கு எழுதி கொடுத்துள்ளேன். கிரய பத்திரம் எழுதிக்கொடுப்பதற்கு முன்பாக வேறு பத்திரங்கள் எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை. 30.10.1998 ம் தேதி பொது அதிகாரத்தின் அடிப்டையில் சீரங்கசாமிக்கு ஒரு விற்கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தி பதிவு செய்து கொடுத்துள்ளேன் என சாட்சியிடம் ஆவணம் காண்பித்து கேள்வி எழுப்பியபோது சாட்சி ஆவணத்தை படித்து விட்டு முதலில் ஞாபகமில்லை என பதிலளிக்கிறார். பின் மேற்படி ஆவணம் சாட்சியிடம் கொடுக்கப்பட்டு, அதிலுள்ள விவரங்கள் ஞாபகப்படுத்தி சாட்சியம் அளிக்க கேட்டபோது மீண்டும் தனக்கு ஞாபகமில்லை என கூறுகிறார். சீரங்கசாமி சுப்பிரமணிக்கு அவருக்கு பாத்தியப்பட்ட மீதமுள்ள சொத்தை பொறுத்து வாசாஆ 4ன் அடிப்படையில் கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்தில் 6 வீடுகள் மற்றும் குடோன் கட்டி மின்இணைப்பு பெற்று காவேரி குடிநீர் இணைப்பு பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனக்கு பொது அதிகாரம் கொடுத்தவர்கள் கட்டியதாக தெரிந்து கொண்டேன். நான் சீரங்கசாமி, சுப்பிரமணிக்கு கிரயம் ஏற்படுத்திக் கொடுத்தபோது அது காலியிடமாக தான் இருந்தது. அதற்கு பின் தான் 3ம் பிரதிவாதி கட்டிடம் கட்டினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சொத்திற்கு குன்னத்துர் ரோட்டிலிருந்து செல்ல 20 அடி அகலத்தில் தடம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. பெருந்துறை பேரூராட்சிக்கு உட்பட்ட பாதாள சாக்கடை மற்றும் காவேரி குடிநீர் இணைப்பு அந்த பாதை வழியாக தான் செல்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுப்பிரமணி கலைமகள் போர்வெல்ஸ் என்ற பெயரில் தொழில் செய்து வந்தார் என்றால் என்னுடன் சேர்ந்து பைனான்ஸ் தொழிலும்

செய்து வந்தார். என்னுடன் சேர்ந்து பைனான்ஸ தொழில் செய்ததற்கு ஆவணங்கள் இல்லை. பதிவு செய்யாத தொழில் தான் செய்து வந்தோம். பொது அதிகார ஆவணம் ரத்து செய்யப்பட்டு விட்டதா அல்லது அமலில் உள்ளதா என்றால் எனக்கு கொடுத்த பொது அதிகாரத்தின் நோக்கம் முடிந்து விட்டதால் அது ரத்தாகிவிட்டது என்று கூறுகிறார். கடனிற்காக ஏற்படுத்திக் கொடுத்த ஆவணத்தைபொறுத்து கிரயம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாக சொல்லும் நிலையில் அந்த பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்ய வாதிகள் நடவடிகக்கை எதுவும் எடுக்கவில்லை, என் மீததோ சீரங்கசாமி மற்றும் சுப்பிரமணி மீது புகார் எதுவும் கொடுத்ததார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஒரு முறை மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து என்னை அழைத்தார்கள், நான் அனைத்து விவரங்களையும் சொல்லிவிட்டு வந்து விட்டேன். என்னுடன் எந்த காலத்திலும் சீரங்கசாமியும் சுப்பிரமணியும் லேவாதேவி தொழில் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஏற்படுத்திக் கொடுத்த கிரய ஆவணம் அப்போதே நடைமுறைக்கு வந்து 3ம் பிரதிவாதி கட்டிடங்கள் கட்டி சுவாதீனத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. வாதிகள் உறவினர்கள் என்பதால் நான் தற்போது எதிர்வாதம் தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க எதிர்வாதம் தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை ( வாதி தரப்பில்)</u>**

1ம் வாதி கிருஷ்ணசாமிக்கு ஒரு சகோதரர் உண்டு. கிருஷ்ணசாமி குடும்பத்தமாருக்கு அவரின் சகோதரர் வகையில் பூர்வீக சொத்துக்கள் உண்டு என்றால் சரிதான். பூர்வீக சொத்துக்களை பிரிவினை செய்து கொண்ட வகையில் வாதிகளுக்கும் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சரி. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் வழக்கு சொத்துடன் இணைந்த சுமார் 2 ஏக்கர் பரப்பளவுள்ள விவசாய பூமி என்றால் சரிதான். அந்த 2 ஏக்கர் பூமியில் வாதிகள் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறார்கள்,

கிணறு உள்ளது மற்றும் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரி. அதிலுள்ள கட்டிடங்கள் வாதிகள் கட்டியுள்ளார்கள் என்றால் வாதிகள் கட்டியதாக சொன்னார்கள். இன்றைய தேதி வரை வழக்கு சொத்துக்களுடன் இணைந்த 2 ஏக்கர் பூமி வாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான். நான், சுப்பிரமணி, சீரங்கசாமி ஆகியோர் 2000 ஆண்டிற்கு முன்பாகவே ஒரு பதிவு செய்யப்படாத நிதி நிறுவனம் நடத்தி வந்தோம் என்றால் சரிதான். நாங்கள் செய்து வந்த தொழிலில் வழக்கமாக கடனிற்கு ஆதரவாக கிரய ஒப்பந்தம் , பொது அதிகார ஆவணம் பெறும் வழக்கம் இருந்தது என்றால் சரிதான். ரூ.100 க்கு மாதம் ஒன்றிற்கு ரூ.3/- வட்டி வாங்கும் வழக்கம் இருந்தது என்றால் சரிதான். 3ம் வாதி சண்முக சுந்தரம் பிரதிவாதிகளிடம் ரூ.2,00,000/- கடன் கேட்டார் என்றால் சரிதான். ரூ.2,00,000/- பணம் கொடுத்துவிட்டு 17.08.1998ல் எனது பெயரில் ஒரு பொது அதிகார ஆவணம் வாதிகளிடமிருந்து பெற்றுக் கொண்டோம் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வாசாஆ 2 நான் பெற்றுக் கொண்ட பொது அதிகார ஆவணத்தின் நகல் என்றால் சரிதான். பொது அதிகார ஆவணத்தில் கண்டுள்ள சொத்து பெருந்துறை சார் பதிவின் ஆள்வரையறை சொத்து, வாசாஆ 2 பிதுராஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் 17.08.1998 தேதிய உறுதி மொழி ஆவணம் நான் ஏற்படுத்திக் கொடுத்த ஆவணம் தான் அது **வாசாஆ 6** வாசாஆ 6 உறுதி மொழி ஆவணத்தின்படி அதிலுள்ள தரப்பினர்கள் நடந்து கொள்ள வேண்டும். வாசாஆ 6 ல் 2ம் பிரதிவாதி சீரங்கசாமி சாட்சி கையொப்பம் செய்துள்ளார். வாசாஆ 6 ல் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் நாங்கள் பேசிக் கொண்ட விவரங்கள் என்றால் சரிதான். 3ம் வாதி தான் பெற்ற கடனை திரும்ப செலுத்தும பட்சத்தில் பிரதிவாதிகள் அந்த சொத்தை திரும்ப எழுதிக் கொடுக்க வாசாஆ 6ன் படி கடமைபட்டவர்கள் என்றால் சரி. 3ம் வாதி மாதம் ரூ.6000/- வட்டியாக செலுத்தி வந்தார். வழக்கின் 2,3 பிரதிவாதிகளுக்கு வாசாஆ 3

கிரய பத்திரம் எழுதி கொடுத்தேன் என்றால் சரி. கிரயம் ஏற்படுத்திக கொடுத்த விவரம் வாதிகளுக்கு சொல்லவில்லை. பொது அதிகார ஆவண்ததின் அடிப்படையில் சுவாதீனம் வழங்கப் படவில்லை.பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் நான் எழுதி கொடுத்த கிரயத்திற்கு கிரயம் பெற்றவர்களுக்கு சுவாதீனம் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ 3 கிரயத்திற்கு கிரயத் தொகை எதுவும் பரிமாற்றிக் கொள்ளப்படவில்லை. வாசாஆ 3ல் கண்டுள்ள சொத்து 2001 ம் ஆண்டே சுமார் 50 லட்சம் மதிப்பு பெறும் என்றால் இருக்கலாம். தாவா சொத்து பெருந்துறை -குன்னத்தூர் சாலையில் தென்புறம் அமைந்துள்ளது என்றால் சரிதான். 3ம் வாதி கடனை திரும்ப செலுத்தி விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நிதி நிறுவனத்தை 2002 ம் ஆண்டு நாங்கள் முடித்துக் கொண்டோம். 2,3 பிரதிவாதிகள் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்பதை நான் அந்த வழியில் சென்று வந்த வகையில் தெரிந்து கொண்டேன். என்னுடைய வீடு துடுப்பதியில் உள்ளது. வாதிகள் 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது புகார் கொடுத்து விசாரணைக்கு பின் போலிசார் உரிமையியல் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளுமாறு சொல்லி விட்டார்கள். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தபோது சீரங்கசாமி பார்த்துக் கொள்வதாக சொல்லிவிட்டதால் நான் அவரிடம் கையொப்பம் செய்து கொடுத்து விட்டேன். வாதிகள் சொத்தை அபகறிப்பதற்காக நாங்கள் பொது அதிகார ஆவணம் பெற்றோம் என்றால் சரியல்ல. வாதிகள் விற்கும் எண்ணத்தில் பொது அதிகார ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.11.25 18:42:57 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS